நூலக நிறுவனம்

மாதாந்த அறிக்கை – ஓகஸ்ட் 2018

**வணக்கம்**

நூலக நிறுவனத்தின் 2018 ஓகஸ்ட் மாத ஆவணமாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

## எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)

| வகை | எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 964 | 33,546 |
| பக்கம் தவறியவை | 23 | 1,184 |
| பக்கம் சிதைந்தவை | 2 | 20 |
| தரமேம்படுத்தல் | 8 | 414 |
| கையெழுத்துப்பிரதிகள் | 1 | 32 |
| மொத்தம் | 998 | 35,196 |

## எண்ணிம நூலகம் (Digital Library)

- கொக்குவில் அலுவலக கிளையில் இம்மாதம் 454 ஆவணங்கள் 21,366 பக்கங்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளது.
- யாழ்ப்பாண பொது நூலக பத்திரிகை ஆவணவாக்கலில் இம்மாதம் 343 ஆவணங்கள் 4,680 பக்கங்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளது.
- யாழ் பல்கலைக்கழக ஆவணவாக்கலில் இம்மாதம் 212 ஆவணங்கள் 9,814 பக்கங்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளது.
- ஆவணங்களுக்கான 1,028 பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.
- ஆவணங்களுக்கான 772 கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது.
- 1,100 ஆவணங்கள் வலைத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளது.
- ஆவணவாக்கலின் முக்கியம் கருதி பக்கம் தவறியவை மற்றும் சிதைந்தவைகளும் தொடர்ந்தும் ஆவணமாக்கப்படுகின்றது.
- இம் மாதம் 10 ஆவணங்கள் 548 பக்கங்கள் இரு முறை மின்வருடப்பட்டுளதோடு வலைத்தளத்தில் அடங்காதா 1 ஆவணம் 116 பக்கங்களும் மின்வருடப்பட்டுள்ளது.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

இம் மாதம் யோகேஸ்வரி சிவப்பிரகாசம், பரணிதரன், பத்மநாப ஐயர், சோதிலிங்கம் போன்றோருடைய ஆவணங்களும் பரணிதரனால் கொண்டுவரப்பட்ட யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம், யா/குட்டியப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை - வயாவிளான், யா/மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை ஆகிய பாடசாலை ஆவணங்களும் சிவதொண்டன் நிலையத்திற்கு சென்றும் அங்கிருந்து கொண்டு வரப்பட்டதுமான சிவதொண்டன் இதழ்களும் மின்வருடப்பட்டுள்ளன. ஆவணங்களை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

ஓகஸ்ட் மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணமாக்குவதற்கான அனுமதியினை பதிவு செய்துள்ளனர்.

- வெளியீட்டாளர்கள்
  - J/ Katkovalam M.M.T.M. School
  - J/ Thunnalai Kasinathar Vidyalayam
  - J/ Valvettiturai A.M.T.M. School
  - J/ Valvetty Vinayagar Vidyalayam
  - J/ Nuffield School for the Deaf and Blind, Kaithady
- எழுத்தாளர்கள்
  - Sivarajah, V.

**காப்புப்படி (Backup)**

56701-57300 வரையான ஆவணங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு வன்தட்டுக்களில் காப்புப்படி எடுக்கப்பட்டுள்ளது.

**Master-files and Applications Backup**

இம்மாதம் எடுக்கப்படவில்லை.

**ஆவணகம் வலைத்தளம் (aavanaham.org)**

ஆவணகம் (aavanaham.org) வலைத்தளத்தில் ஓகஸ்ட் மாதம் கீழ்வரும் விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

| வகை | எண்ணிக்கை |
|---|---|
| நூற்பட்டியல் | 1 |
| ஒலிச்சேகரம் | 3 |
| படங்கள் | 130 |
| குறுங்கால ஆவணம் | 70 |
| ஆய்வுப் பொருட்சேகரங்கள் | 02 |
| ஓவியங்கள் | 18 |
| கையெழுத்தாவணம் | 12 |

| வாய்மொழி வரலாறுகள் | 3 |
|---|---|

**பயனர் சேவை (User Service)**

- எண்ணிம நூலக வலைத்தளத்தில் (www.noolaham.org) இம்மாதம் 26,642 பயனர்களால் 328,517 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 73.2% புது வாசகர்களும் 56.% ஏற்கனவே உள்ள வாசகர்களும் பயன்படுத்தியுள்ளனர்.
- ஆவணக வலைத்தளத்தில் (aavanaham.org) இம்மாதம் 2,624 பயனர்களால் 11,523 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 88.3% புது பயனாளர்களும் 11.7% ஏற்கனவே உள்ள பயனாளர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

**செயற்றிட்டங்கள் (Projects)**

**1. EAP**

இம்மாதத்திற்கான (ஆவணி மாதம்) EAP (1056) செயற்றிட்டத்திற்கு அமைவாக கள ஆய்வாளர்களின் களாய்வின் அடிப்படையில் வவுனியா, தொடர்பகம் நூலகம், அளவெட்டி, திருமறை கலாமண்டபம், மாவடி, ஏழாலை மடத்துப்பிள்ளையார் கோவில், நல்லூர் சிவன் கோவில் ஆகிய இடங்களில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இம் மாதம் மட்டும் கிட்டத்தட்ட 33,100 சுவடிப்பக்கங்கள் அடையாளம் காணப்பட்டது.

**2. தொழிற்கலை ஆவணப்படுத்தல்**

இம்மாதத்திற்கான (ஆவணி மாதம்) தொழிற்கலை ஆவணப்படுத்தல் செயற்திட்டத்திற்கு அமைவாக கிழக்கில் 18 மற்றும் வடக்கில் 02 களப்பணிகள் செய்யப்பட்டன.

**3. வாழ்க்கை வரலாற்று ஆவணப்படுத்தல்**

இம்மாதத்திற்கான (ஆவணி மாதம்) வாழ்க்கை வரலாறு ஆவணப்படுத்தல் செயற்றிட்டத்திற்கு அமைவாக மலையகத்தில் 08 மற்றும் கிழக்கில் 01 வாய்மொழி வரலாறுப் பதிவுகள் இடம்பெற்றன.

**வழிகாட்டுநர் சபை (Regulatory Board)**

இம்மாதம் ஒரு கூட்டம் இடம்பெற்றது. அதற்கான இணைப்பு

- ஓகஸ்ட் 12, 2018

https://docs.google.com/document/d/1V4nM8eJLV6fMxNxmJaETKeiXxazIwSmvxUrCeCEKKwQ/edit

**வரவு செலவு அறிக்கை (Financial Statement)**

- ஓகஸ்ட் மாதத் தேவைகளுக்காக ரூ. 563,963.82 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் ரூ. 237,639.50, தொடர்பாடல் ரூ. 12,231.26, மின்சாரம் ரூ. 5,034.60, வாடகை ரூ. 30,000.00, நிருவாகச் செலவு ரூ. 77,348.00, செயற்றிட்டச் செலவு ரூ. 177,640.46 (EAP ரூ. 154,558.00 மற்றையவை ரூ.23,082.46) மற்றும் ஏனைய செலவுகள் ரூ. 24,070.00 ஆகியன உள்ளடங்குகின்றன.
- ஓகஸ்ட் மாதத்தில் கனடா அன்பர்கள் ஊடாக ரூ. 114,708.97 மற்றும் ஏனைய அன்பர்கள் ஊடாக ரூ. 525,910.00 நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றது.

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகின்றது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.